மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.
முன்னிலை :– செல்வி – அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24 ம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.04/2023
உள்
அசல் வழக்கு எண்.59/2019
--------

1. ந.பால்ராஜ்
2. ஆ. சடையாண்டி
3. என். நாகலெட்சுமி
4. பா. லட்சுமி .. மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

க.மகாலட்சுமி .. எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனு என் முன்பு 20.04.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி. பிரசன்னகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.இலட்சுமிகாந்தன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு அபிடவிட்டு, எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 10(A)–ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்டு அளந்து அறிக்கை சமர்பித்துள்ள அறிக்கையை நீக்கம் செய்து மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் பட்டாவில் உள்ள அளவுகளின்படி சாத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள தலைமை நில அளவரின் தலைமையில் வருவாய்துறை ஆவணங்களின் சாத்தூர் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் அவர்களின் துணையுடன் தாவா இடத்தை பார்வையிட்டு அளந்து அறிக்கை சமர்பிக்க (Re Issue) ஒரு நீதிமன்ற ஆணையர் அவர்களை நியமிக்க உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

2.1. மனுதாரர் இம்மனுவின் மனுதாரர். தாவா அசல் வழக்கில் 3 ம் பிரதிவாதி

ஆவார். வாதி தபசில் கண்ட சொத்து வாதிக்குப் பாத்தியப்பட்டது எனவும், அதன் தொடர்ச்சியாக வாதி தபசில் சொத்தினை அமைதியான முறையில் அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ அவரது வகையாட்களோ எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யாமல் இருக்க நிரந்தர தடையுத்தரவு வழங்க வேண்டுமென பிராது தாக்கல் செய்துள்ளார். மேற்படி பிராதை ஆட்சேபித்து மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பினர் எதிருரை தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில், தாவாச் சொத்தை பார்வையிட்டு அளந்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு நீதிமன்ற ஆணையரை நியமிக்க வேண்டுமென மனு தாக்கல் செய்துள்ளார். அதனை ஆட்சேபித்து மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பினர்கள் ஆட்சேபித்து இருந்துள்ளார்.

2.2. இருந்தபோதிலும், மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு, அம்மனுவின் பேரில் தாவா இடத்தை அளந்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து அவரும் தாவா இடத்தை அளந்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார். மேற்படி அறிக்கையில் உண்மைக்குப் புறம்பான விஷயங்களும் தவறான அளவுகளும் பத்திரம் மற்றும் பட்டா இல்லாமல் இம்மனுவின் மனுதாரர்கள் தரப்பினர்களின் இடத்தை அளந்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி அறிக்கையை நீக்கம் செய்து மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பினர்களின் பத்திரம் பட்டா ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் சாத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள தலைமை நில அளவர் தலைமையில் சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்களின் வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் அளந்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவாக வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது. இல்லாவிடில் மனுதாரர்கள் தரப்பினர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடியதாய் இருக்கிறது. இம்மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர் தரப்பினருக்கு எவ்வித ஆட்சேபணையும் இருக்கக் கூடியதில்லை. எனவே மனு தாக்கல்.

3) <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை ஆட்சேபணையின் சுருக்கம்:—</u>

3.1. இதனடியில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்படும் விஷயங்கள் தவிர மற்ற விஷயங்கள் யாவும் உண்மைக்கு புறம்பாக உள்ளது என மறுக்கப்படுகிறது. தாவா மனு

பொய்யும் புரட்டுமாக உள்ளது. தாவா மனுவில் மனுதாரர்களுக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்க கூடியதில்லை. தாவா மனுவில் சொல்லியுள்ள விபரம் தாவா மனுவில் அவருக்கு பரிகாரம் வழங்க போதுமானதாக இல்லை. ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் அவர்கள் அரசு ரிக்கார்டு உதவியுடன் பிரதிவாதி உதவியுடன் அளந்து பிரதிவாதி சொத்து சரியாக உள்ளது என்று தெரிவித்து அறிக்கை தாக்கல் செய்திருக்கின்றார். தவறுதலாக உள்ள பட்டாவை பயன்படுத்தி மோசடியாக உரிமை கோருகின்றார். அதற்கு ஆவணமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மனுதாரர்களுக்கு விரோதமாக இருப்பதால் தாவா வழக்கை காலம் கடத்த பொய்யான காரணம் கொண்டு தாவா மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. கமிஷனர் அறிக்கையை ரத்து செய்ய வேண்டிய தேவையில்லை. நீதிமன்ற வாரண்டை Re – Issue செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. தாவா மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லாது. எனவே தாவா மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதே ஆகும்.

5) நீதிமன்ற ஆணையர் நீ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் எந்த ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. எந்த சான்றாவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**7. <u>தீர்வு:–</u>**

7.1. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த மனுவின் மனுதாரர். அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி ஆவார். மனுதாரர்கள் எதிர்மனுதாரர் மீது தபசில் சொத்து சம்பந்தமாக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் பிரதிவாதிகளான இந்த மனுவின் மனுதாரர்களால் எதிர்வழக்குரை செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, வழக்கு வாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து

தாவா இடத்தை அளந்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார். மேற்படி அறிக்கையில் உண்மைக்குப் புறம்பான விஷயங்களும் தவறான அளவுகளும் பத்திரம் மற்றும் பட்டா இல்லாமல் இம்மனுவின் மனுதாரர்கள் தரப்பினர்களின் இடத்தை அளந்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி அறிக்கையை நீக்கம் செய்து சாத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திலுள்ள தலைமை நில அளவர் தலைமையில் சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்களின் வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் அளந்து அறிக்கை சமர்பிக்க ( Re Issue) செய்து ஒரு நீதிமன்ற ஆணையரை நியமிக்க அனுமதியளித்து உத்ததரவிடக்கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

7.2. எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில், மனுதாரர்கள் தாவா வழக்கை காலம் கடத்த பொய்யான காரணம் கொண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று வாதிட்டுள்ளார்.

7.3. மனுதாரர் தரப்பில் உரிய அதிகாரிகளுடன் தாவா இடத்தை பார்வையிட்டு அளந்து அறிக்கை சமர்பிக்க (Reissue) ஒரு நீதிமன்ற ஆணையரை நியமிக்க இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து பரிசீலிக்கையில் வழக்கு பதிவுகள் முன்பு தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் அறிக்கை ஏற்கனவே வழங்கப்பட்ட வாரண்ட் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை சொத்தும் இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை சொத்தும் ஒன்றுக்கொன்று பொருந்தாதவையாக இருப்பது தெளிவாகிறது. குறிப்பாக முன்பு ஆணையர் ஆய்வு செய்த சொத்து விவரங்கள் மற்றும் இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரங்கள் இரண்டிற்கும் இடையில் அளவுகள், எல்லைகள் அடையாளங்கள் ஆகிவயற்றில் வேறுபாடு காணப்படுகிறது.

7.4. இந்நிலையில் மனுதாரர் கோரிய நிவாரணம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. வேறுபட்ட சொத்தை ஆய்வு செய்ய வேண்டுமெனில் உரிய சட்டக்கோட்பாட்டின்படி புதியதாக மனு தாக்கல் செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறது. மேற்கண்ட காரணத்தினால் மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை

**நீதிமன்ற தரப்பு சாட்சி –**

நீ.ம.சா.1 – சிவக்குமார்

**நீதிமன்ற தரப்பு சான்றாவணங்கள் –**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
சாத்தூர்.
இ.ம.எண்.04/2023
உள்
அ.வ.எண்.59/2019
**<u>உத்தரவு</u>**
நாள் – 24.04.2026.